**சுருக்கம்**

பணியமைப்பு– மதுரை மாநகராட்சி– பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பிரிவில் 22 பணியாளர்களுக்கு தேர்ச்சித் திறன் உதவியாளர் நிலை–I (Skilled Assistant Grade-I) என்ற பணியிடத்திற்கு பணி உயர்வு வழங்கி சம்பளம் நிர்ணயம் செய்ததற்கு அரசின் பின்னேற்பு– ஆணை வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = = = =

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.4) துறை

அரசு ஆணை (இருபதாண்டு) எண். 14 நாள் : 08–03–2010

திருவள்ளுவராண்டு 2040,
மாசி 24–ம் நாள்

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை, நாள் 26–9–1996
2. அரசாணை (நிலை) எண்.140, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை, நாள் 25–07–1997
3. அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மாந4) துறை, நாள் 12–5–1998
4. ஆணையர், மதுரை மாநகராட்சி கடித எண்.ம.பொ.3/34666/2005 நாள் 14–02–2006
5. நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.10893/2006/மாநஅ2 நாள் 03–04–2006

**ஆணை:-**

மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மதுரை மாநகராட்சியின் பணியிடங்களை நிரப்புதல், தொடருதல் மற்றும் புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் சம்பந்தமாக ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணையில் பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் தலைப்பின் கீழ் இனம் (8)–ன் கீழ் தேர்ச்சித் திறன் உதவியாளர்கள் நிலை–01 மற்றும் தேர்ச்சித் திறன் உதவியாளர் நிலை–02 ஆகிய பதவிகளில் பணியாளர் எண்ணிக்கை தொடர்பாக கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

| | | |
|---|---|---|
| தேர்ச்சித் திறன் உதவியாளர் நிலை–01 (Skilled Ass.Grade-01 Rs.1100-1600) | எண்ணிக்கை நிர்ணயிக்கப்படவில்லை | ஒன்று (1) முடிவாகி ஆணை பிறப்பிக்கும் வரை இப்பணியிடங்கள் நீட்டிக்க அனுமதிக்கப்படுகிறது. |
| தேர்ச்சித் திறன் உதவியாளர் நிலை–02 (Skilled Ass.Grade-02 Rs.950-1500) | 149 (நூற்றி நாற்பத்தி ஒன்பது) | முடிவான ஆணைகள் பிறப்பிக்கும் வரை இப்பணியிடங்கள் நீட்டிக்க அனுமதிக்கப்படுகிறது. |

மேற்கண்ட இரண்டு பணியிடங்களில் தேர்ச்சித் திறன் உதவியாளர் நிலை–I பணியிடங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படவில்லை. ஒரு பணியிடம் வழங்கப்பட்டு முடிவான ஆணை பிறப்பிக்கும் வரை இப்பணியிடங்கள் நீட்டிக்க அனுமதிக்கப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை–II (ரூ.950–1500) என்ற பணியிடத்தில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் தங்களை (பிட்டர், எலக்ட்ரிஷியன் உள்பட) தேர்ச்சி திறன் நிலையாளர் நிலை–I என்ற பணியிடத்தில் பணி உயர்வு மூலம் நியமனம் செய்து அதற்கான ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்கும்படி கோரினர். 22 பணியாளர்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை–1 என்ற பணியிடத்திற்கு பதவி உயர்வு அளிக்க மதுரை மாநகராட்சி நியமனக் குழு தீர்மான எண்.59 நாள் 8–11–2005 ஒப்புதல் அளித்துள்ளது. மதுரை மாநகராட்சி மாமன்றம் தீர்மான எண்.452 நாள் 28–12–2005–ல் மேற்படி நியமனக்குழுவின் தீர்மானத்தினை ஏற்று 22 பணியாளர்களுக்கும் பணி உயர்வு அளிக்கப்பட்டதற்கு அரசின் ஒப்புதல் பெற தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மதுரை மாநகராட்சியின் நிர்வாக நலன் கருதி, நியமனக்குழு தீர்மானம் மற்றும் மாமன்ற தீர்மானத்தின்படி மதுரை மாநகராட்சியில் தேர்ச்சிதிறன் உதவியாளர் நிலை–I பணியிடத்தில் 22 பணியாளர்களுக்கு பணி உயர்வு வழங்கி சம்பளம் நிர்ணயம் செய்ததற்கு அரசின் பின்னேற்பு ஒப்புதல் அளிக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையர் நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மதுரை மாநகராட்சி ஆணையர் செயற்குறிப்பினை ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை ஏற்று, மதுரை மாநகராட்சியில் பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பிரிவில் பணியாற்றும் 22 பணியாளர்களுக்கு தேர்ச்சி திறன் நிலை உதவியாளர் நிலை–I (Skilled Assistant Grade-I) என்ற பணியிடத்திற்கு பணி உயர்வு வழங்கி சம்பளம் நிர்ணய செய்த மதுரை, மாநகராட்சி ஆணையரின் செயலுக்கு பின்னேற்பு ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை–108
நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அந2) துறை. சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்